<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 219/2015 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | சின்ன இருசன் | நாள் | 27.03.2024 |
| தகப்பனார் பெயர் | சுருட்டையன் (எ) பூவரச கவுண்டர் | | |

**<u>4 முதல் 6 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–</u>**

32) தாவா சொத்திற்குரிய பட்டா யார் பெயரில் உள்ளது என்றால், கூட்டுப்பட்டாவாக என் தந்தை சுருட்டையன் (எ) பூவரச கவுண்டர் பெயரில் உள்ளது. என் வழக்குரையில் என் மகன் கோவிந்தராஜ் பெயருக்கு உயில் எழுதி கொடுத்துள்ளதாக நான் சொல்லியுள்ளேன் என்றால், அவ்வாறு நான் சொல்லவில்லை. இவ்வழக்கில் 5ம் பிரதிவாதி ராஜலிங்கத்திற்கு என்ன வயது என நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால், அவர் மீது நான் வழக்கே போடவில்லை. 6ம் பிரதிவாதி மணிகண்டன் மீதும் நான் வழக்கு போடவில்லை.

33) 5, 6 பிரதிவாதிகள் மைனர் என்பதால், அவரது தாயார் வெள்ளையம்மாள் பெயரில் பத்திரம் எழுதிக்கொடுத்தாக என் வழக்குரையில் நான் சொல்லியுள்ளேனா என்றால், இல்லை. என் தம்பி சின்னமுத்துவின் பெயரில்தான் பொதுவாக ஒரு கிரயம் ஏற்படுத்தி கொடுத்தோம். அவர் இறந்ததற்கு பின்னிட்டு மேற்படி கிரய சொத்தை அவரது மனைவி வெள்ளையம்மாள் தன் பெயருக்கு மாற்றிக்கொண்டார். அது நியாயமானது என்பதால், நாங்களும் அது குறித்து எதுவும் கேட்டுக்கொள்ளவில்லை.

34) என் வழக்குரையில் என் சகோதரர் சின்னமுத்து பெயரில்தான் கிரயப்பத்திரம் ஏற்படுத்தியதாக நான் சொல்லியுள்ளேனா என்றால், ஆமாம். எந்த வருடத்தில் சின்னமுத்துவின் பெயரில் மேற்படி கிரய பத்திரத்தை ஏற்படுத்தி கொடுத்ததாக நான் சொல்கிறேன் என்றால், தோராயமாக 1985ம் வருடத்தில் ஏற்படுத்தி கொடுத்திருப்போம். சரியாக நினைவில்லை. மேற்படி கிரய பத்திரம் ஏற்படுத்தி கொடுத்ததாக நான் சொல்லும் சமயத்தில் சின்னமுத்துவிற்கு எவ்வளவு வயதிருக்கும் என்றால், சுமார் 13

வயது இருக்கும். சின்னமுத்துவிற்கு எப்போது திருமணம் ஆனது என்றால், குறிப்பாக எனக்கு தெரியாது. திருமணத்தின்போது சின்னமுத்துவிற்கு என்ன வயதிருக்கும் என்றால், அதுவும் எனக்கு நினைவில்லை.

35) தாவா சொத்தை பொறுத்து என் சகோதரிகள் யாரேனும் என் பெயரில் விடுதலை பத்திரம் ஏதேனும் ஏற்படுத்திக்கொடுத்துள்ளனரா என்றால், இல்லை. என் பிரமாண பத்திரிக்கையில் என் சகோதரர் இறந்தபிறகு அவரது குடும்பத்தை பாதுகாக்க வேண்டி அவரது மனைவி வெள்ளையம்மாள் பெயருக்கு சொத்துக்களை கிரயம் வாங்கி வைத்ததாக நான் சொல்லியிருந்தால், அது தவறானது என்றால், சரிதான். என் தந்தை சுருட்டையன் (எ) பூவரச கவுண்டருக்கு எவ்வளவு சொத்துக்கள் உள்ளது என்பதற்கோ, அவற்றை யார் யார் பெயரில் பாராதீனம் செய்துள்ளார் என்பதற்கோ, வில்லங்க சான்றிதழ் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை.

36) என் தந்தை பெயரிலுள்ள அனைத்து சொத்துக்களையும் காட்டாமல், பிரதிவாதிகளுக்கு எவ்வித சொத்துக்களும் அளிக்கப்படாமல், தாவா சொத்தை நானே அபகரித்துக்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் முழுமையான சொத்துக்கள் குறித்த விவரங்களை குறிப்பிடாமல் தாக்கல் செய்துள்ள பாகபிரிவினை வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால், சரியல்ல.

37) என் வழக்குரையில் தாவா சொத்துக்களை பாகம் பிரித்து தர நான் பிரதிவாதிகளிடம் கோரி அதை அவர்கள் மறுத்து விட்டதால், பஞ்சாயத்து ஏற்படுத்தப்பட்டதாக நான் சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். மேற்படி பஞ்சாயத்தில் யார் யார் கலந்து கொண்டனர் என பெயர் குறிப்பிட்டு நான் என் முதல் விசாரணை சாட்சியத்தில் சொல்லவில்லை என்றால், சரிதான். காவல் நிலையத்தில் நான் புகார் அளித்துள்ளதாக சொல்லியுள்ள நிலையில், எந்த தேதியில் புகார் அளித்தேன் என்றால், தேதி நினைவில்லை. 2015ம் வருடத்தில் புகார் அளித்தேன். மேற்படி புகாரின் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், சரியாக நினைவில்லை.

38) பிரதிவாதிகள் என்னை அடித்துவிட்டதாக நான் சொல்லும் நிலையில், அதற்கு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான ஆதாரங்கள் எதையேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. நான் சொல்வதுபோல் அவ்வாறு பஞ்சாயத்து ஏற்படவில்லை என்றாலும், பிரதிவாதிகளின் பேரில் நான் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும், அவ்வாறு நான் கொடுத்திருந்தால், அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், மேற்படி சங்கதிகளை இவ்வழக்கில் வழக்கு மூலம் ஏற்படுத்தவேண்டும் என்பதற்காக பொய்யாக வாதுரைத்துள்ளேன் என்றாலும், சரியல்ல.

39) பிரதிவாதிகள் தாவா சொத்தை விற்க முயற்சி செய்ததாக நான் என் வழக்குரையில் கூறியுள்ளேன் என்றால், சரியல்ல. அவர்கள் விற்க முயற்சி செய்யவில்லை. அவ்வாறு என் வழக்குரையில் பிரதிவாதிகள் சொத்தை விற்க முயற்சி செய்ததாக நான் சொல்லியிருந்தால் அது தவறானது என்றால், சரிதான். தற்போது தாவா சொத்தின் மதிப்பு என்னவென்றால், அது குறித்து எனக்கு சரியாக தெரியவில்லை. தாவா சொத்தின் மதிப்பே தெரியாமல் தான் இவ்வழக்கை நான் தாக்கல் செய்து நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளேனா என்றால், தாவா சொத்தின் அரசாங்க வழிகாட்டி மதிப்பை கணக்கிட்டு, நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளேன்.

40) நான் சொல்வது தவறானது என்றாலும், தாவா சொத்தின் மதிப்பு நான் தாக்கல் செய்த சமயத்திலேயே ரூ.1 லட்சத்திற்கு மேல் இருக்கும் என்றாலும், தாவா சொத்தின் மதிப்பை குறைத்து காட்டி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. தாவா சொத்தில் மொத்தம் எத்தனை கிணறுகள் உள்ளது என்றால், ஒரு கிணறுதான் உள்ளது. தாவா சொத்தில் மொத்தம் மூன்று கிணறுகளும், இரண்டு வீடுகளும் உள்ளது என்றால், சரியல்ல. மேற்படி வீடுகள் தற்போது நிலையில் இல்லை அவை இடிந்துவிட்டது.

41) நான் சொல்வது தவறானது என்றாலும், மேற்படி நிலத்தில் ஒரு தார்சு வீடும், ஒரு சிமெண்ட் அட்டை வேய்ந்த வீடும் உள்ளது என்றாலும், அவற்றின் மதிப்பே

ரூ.5 லட்சத்திற்கு மேல் வரும் என்றாலும், சரியல்ல. மேற்படி வீடுகள் வேறு சர்வே எண்ணில் உள்ளது. மேற்படி சர்வே எண்களை இவ்வழக்கின் சொத்து விவரத்தில் காண்பித்துள்ளேனா என்றால், இல்லை. தாவா சொத்தில் என்னென்ன மரங்கள் உள்ளது என்றால், வேப்பமரங்கள், ஆயா மரம் ஒன்றும் ஆகியவை மட்டும்தான் உள்ளது வேறு மரங்கள் இல்லை.

42) தாவா சொத்து விவரமே முழுமையாக காட்டாமல், நான் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல. இவ்வழக்கை மற்ற பாகஸ்தர்களின் உரிமையை பரிக்கும் விதத்தில் பொய்யான சங்கதிகளை கூறி நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. என் வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால், சரியல்ல.

(1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.